### உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு

# சேலம் உருக்காலையை நவீனப்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 23-

சேலம் உருக்காலையை நவீனமயமாக்கல் பற்றி கழக பொருளாளர், மக்களவை கழகக்குழுத் தலைவர் டி. ஆர். பாலு அவர்கள் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய இணை அமைச்சர் பூபதி ராஜு சீனிவாச வர்மா அவர்கள் அளித்த பதில் வருமாறு:



சேலம் உருக்காலையின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும் நவீனமயமாக்குவதற்கும் அரசு மற்றும் இந்திய இரும்பு மற்றும் எஃகு ஆணையம் (SAIL) திட்டமிட்டுள்ளதா, ஆம் எனில், முன்மொழியப்பட்ட முதலீடுகள் உட்பட அதுகுறித்த விவரங்கள் என்ன; மற்றும் துருப்பிடிக்காத இரும்பு (STAINLESS STEEL) ஏற்றுமதியை ஊக்குவிக்க எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளின் விவரங்கள் என்ன? என மக்களவையில் டி.ஆர்.பாலு எம்.பி. கேள்வி எழுப்பினார்.

பதில் : இந்திய இரும்பு மற்றும் எஃகு ஆணையத்தின் (SAIL) ஒரு அங்கமான சேலம் உருக்காலை (SSP), ஆண்டுக்கு 1.8 லட்சம் டன் எஃகு உருக்கும் திறனையும், 3.6 லட்சம் டன் எஃகு உருட்டும் (ROLLING) திறனையும் கொண்டுள்ளது. சேலம் உருக்காலையில் தற்போதுள்ள உற்பத்தித் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

உற்பத்தித் திறன் பயன்பாட்டை மேம்படுத்துதல், செயல்பாட்டுத் திறனை அதிகரித்தல், மூலப்பொருள் மற்றும் மின்சார நுகர்வைக் குறைத்தல், மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட துருப்பிடிக்காத எஃகு பொருட்களுக்கு முக்கியத்துவம் அளித்து தயாரிப்பு கலவையை முறைப்படுத்துதல் உள்ளிட்ட செயல்பாட்டுத் திறன் மற்றும் நீண்டகால நிலைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல நடவடிக்கைகளை SAIL மேற்கொண்டுள்ளது. துருப்பிடிக்காத எஃகின் உள்நாட்டு மற்றும் சர்வதேச விற்பனையை ஊக்குவிப்பதற்காக SAIL தனது சந்தைப் படுத்தல் உத்தியை சீரமைத்து வருகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

---

### கொள்முதலில் குறைந்தபட்ச ஆதரவு விலை

# விவசாயிகளுக்குச் சென்றடைவதை ஒன்றிய அரசு உறுதி செய்கிறதா?

## மக்களவையில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 23-

குறைந்தபட்ச ஆதரவு விலை உரிமைக்கு உறுதியான உத்தரவாதம் வழங்கத் தவறிய ஒன்றிய அரசுக்கு கே.இ. பிரகாஷ், எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவர்கள், குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) திட்டம் விவசாயிகளுக்கு முழுமையாகச் சென்றடைவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சரிடம் விளக்கம் கோரினார். மேலும், குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கும் போது பின்பற்றப்படும் நடைமுறை, அதற்காக கருத்தில் கொள்ளப்படும் காரணிகள் மற்றும் விவசாயிகள் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகள் பரிசீலிக்கப்படுகிறதா என்பதையும் விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன், குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்பான கொள்முதல் நடைமுறைகளை வலுப்படுத்தவும், விவசாயிகளிடையே விழிப்புணர்வை அதிகரிக்கவும், கொள்முதல் செயல்முறைகள் திறம்பட செயல்படுவதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். மேலும், வேளாண் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும், குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் அதனுடன் தொடர்புடைய பயன்கள் விவசாயிகளை முழுமையாகச் சென்றடைவதை உறுதி செய்வதற்கும் ஒன்றிய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்த விவரங்களையும் கேட்டறிந்தார்.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு:

(அ) முதல் (இ) வரை: நாட்டின் முழுமைக்கும் பொருந்தும் வகையில், 22 கட்டாய அறிவிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விலையை நிர்ணயிக்கும் போது, வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் ஆணையத்தின் (CACP) பரிந்துரைகளுடன், மாநில அரசுகள் மற்றும்

தொடர்புடைய ஒன்றிய அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் கருத்துகளும் பரிசீலிக்கப்படுகின்றன.

குறைந்தபட்ச ஆதரவு விலையை பரிந்துரைக்கும் போது, உற்பத்திச் செலவு, தேவை மற்றும் வழங்கல் நிலை, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை விலைகள், பயிர்களுக்கு இடையேயான விலை சமநிலை, வேளாண் மற்றும் வேளாண்மை அல்லாத துறைகளுக்கிடையேயான வர்த்தக விகிதம், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீது ஏற்படக்கூடிய தாக்கம் ஆகியவை மட்டுமின்றி, நிலம், நீர் உள்ளிட்ட உற்பத்தி வளங்கள் சீரான முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் அம்சங்களும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

மேலும், குறைந்தபட்ச ஆதரவு விலையை பரிந்துரைக்கும் முன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள், கொள்முதல் முகமைகள், தொழில் அமைப்புகள், விவசாயிகள் பிரதிநிதிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் ஆணையம் ஆலோசனை நடத்துகிறது. அவ்வாறு பெறப்படும் கருத்துகளும் இறுதி பரிந்துரைகளை உருவாக்கும் போது பயன்படுத்தப்படுகின்றன.

அதேபோல், குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிப்பு



தொடர்பாக, விவசாயிகள் அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளும் அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

(ஈ): குறைந்தபட்ச ஆதரவு விலையின் கீழ் மேற்கொள்ளப்படும் கொள்முதல் நடைமுறைகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் மூலம், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான தொகை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவதுடன், ஆதார் மற்றும் நிலப் பதிவுகள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கொள்முதல் இணையதளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதால், அதன் பயன் நேரடியாக விவசாயிகளுக்கு சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்திய உணவுக் கழகம் (FCI) சார்பில், உயிர்முறை அடையாள (Biometric) அடிப்படையிலான கொள்முதல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், மண்டிகள் மற்றும் கொள்முதல் மையங்களின் செயல்பாடுகளும் முழுமையாக மின்னணு முறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (NAFED) சார்பில், கொள்முதல் முதல் இருப்பு அகற்றம் வரை முழுமையான மின்னணு (EndtoEnd Digitization) நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. eSamriddhi தளத்தின் மூலம் கொள்முதல் மேற்கொள்ளப்படுவதுடன், Drishti தளத்தின் மூலம் இருப்பு மேலாண்மை செய்யப்படுகிறது. இருப்பு விற்பனை மற்றும் அகற்றம் NAFED இணையதளத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பதிவு செயல்முறையில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும் வகையில் POS கருவிகள் பயன்படுத்தப்படுவதுடன், மாதிரி கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் கொள்முதல் நடவடிக்கைகள் எளிமைப்படுத்தப்பட்டு, வெளிப்படைத்தன்மையும் விவசாயிகளுக்கான சேவைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக

துடதெரிவிக்கப்பட்டுள்ளது.

“வேளாண் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை, விரிவாக்கத்திற்கான மக்கள் ஊடக ஆதரவு” (Mass Media Support to Agriculture Extension) என்ற ஒன்றியத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் தூர்தர்ஷன் பிராந்திய சேனல்கள், டிடி கிசான் மற்றும் அகில இந்திய வானொலி ஆகியவற்றின் வாயிலாக, குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிப்பு மற்றும் அதன் செயல்பாடு உள்ளிட்ட அரசுத் திட்டங்கள் குறித்து நாடு முழுவதும் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், NAFED மேற்கொள்ளும் விவசாயிகள் தொடர்பு திட்டங்களின் கீழ், கொள்முதல் பருவம் தொடங்குவதற்கு முன்பாக விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் உடனடி தகவல்கள் அனுப்பப்படுகின்றன. உள்ளூர் நாளிதழ்கள் மற்றும் வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் தகவல் பரப்பப்படுவதுடன், பதிவு மற்றும் ஆவணச் சமர்ப்பிப்பு நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல், APMC சந்தைகள் மற்றும் கிராமங்களில் ஒலிபெருக்கி மூலம் கொள்முதல் தொடர்பான அறிவிப்புகளும் வெளியிடப்படுகின்றன.

(உ): பயிர் சாகுபடி காலங்களில் வேளாண் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (NFSNM), தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் (NMEOOil Palm), தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் எண்ணெய் வித்துகள் (NMEOOilseeds), ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கம் (MIDH), பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) / மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் (RWBCIS), பருப்பு வகைகளில் தற்சார்பு அடையும் இயக்கம் (Mission for Aatmanirbharata in Pulses) மற்றும் கிசான் கடன் அட்டை (KCC) உள்ளிட்ட திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

---

# தமிழ்நாடு பட்ஜெட் - ஆகஸ்ட் 5ல் தாக்கல்!

## சட்டப்பேரவைத் தலைவர் அறிவிப்பு!

*சென்னை, ஜுலை 23 -*

*2026-2027ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5 ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும் என பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது,*




*“2026-2027 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும்.*

*மேலும், ஆகஸ்ட் 6 ஆம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.*

*பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அலுவல் ஆய்வுக் கூட்டம் நடக்கும். அதில் பட்ஜெட் மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப் படும் என்று கூறினார்.*



கோவை மாநகர் மாவட்டம், பாப்பனாய்கன்புதூர் பகுதி, 41 மற்றும் 75 வட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதிக் கழக பொறுப்பாளர் பரணி பாக்யராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், வட்டக் கழக பொறுப்பாளர்கள் தம்பி சண்முகம், சுரேஷ், நித்யானந்தம், ஹரி பிரசாத், பகுதி கழக நிர்வாகிகள் சிவகுமார், அபிராமி, முத்தழகு, கோபாலன், ஸ்ரீபிரியா, தம்பு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### வேளாண் வனவியல் மூலம்

# விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை!

## மக்களவையில் – எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்விக்கு அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜுலை 23-

வேளாண் வனவியல் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற மக்களைவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்விக்கு ஒன்றிய இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்



திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஜுலை 21, 2026 அன்று மக்களவையில்,

வேளாண் வனவியல் மூலம் ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கம், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துதல், நிலையான நிலப் பயன்பாட்டு முறைகளை ஊக்குவித்தல், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பன்முகப்படுத்துதல், ஊரக வளர்ச்சித் திட்டங்களு டன் வேளாண் வனவியலை ஒருங்கிணைத்தல், இத்துறையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள், எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் இணை அமைச்சர் கம்லேஷ் பஸ்வான் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் இணை அமைச்சர் கம்லேஷ் பஸ்வான் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

வேளாண் நிலங்களில் மரங்களை வளர்ப்பதை ஊக்குவிக்கும் நோக்கில், 2014ஆம் ஆண்டு தேசிய வேளாண் வனவியல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், அந்தக் கொள்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் வேளாண் வனவியல் இயக்கம் உருவாக்க பரிந்துரைக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து, 201617 முதல் 202122 வரை, நிலையான வேளாண் இயக்கத்தின் கீழ் வேளாண் வனவியல் துணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டதாகவும், “ஒவ்வொரு வயல் வரப்பிலும் ஒரு மரம்” என்ற நோக்கத்துடன் விவசாய நிலங்களில் மரங்களை வளர்ப்பதற்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், பண்ணை வேலை வாய்ப்பை உருவாக்குதல், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துதல், நிலையான நிலப் பயன்பாட்டை ஊக்குவித்தல், மண் வளத்தைப் பாதுகாத்தல், இயற்கை வளங்களை திறம்பட பயன்படுத்துதல், கார்பன் சேமிப்பை அதிகரித்தல், உயிரினப் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் மரம், விறகு, தீவனம், பழங்கள் உள்ளிட்ட மரவளப் பொருட்கள் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

2023-24 முதல், வேளாண் வனவியல் துணைத் திட்டம் பிரதம மந்திரி ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்டுள்ளதாகவும், தரமான விதைகள், நாற்றுகள், குளோன்கள், வீரிய ரகங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நடவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதுடன், நாற்றுப் பண்ணைகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள நாற்றுப் பண்ணைகளை மேம்படுத்துதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரை 1,725 வேளாண் வனவியல் நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 1,594 லட்சம் தரமான நடவுப் பொரு ட்கள் உருவாக்கப்பட்டு, 403 நாற்றுப் பண்ணைகளுக்கு தேசிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பண்ணைக் காடுகள் வளர்ப்பு உள்ளிட்ட மரநடுகைப் பணிகள் அனுமதிக்கப்பட்ட பணிகளாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், 202627 நிதியா ண்டில், 2026 ஜுன் 30 வரை 44,046 பண்ணைக் காடுகள் தொடர்பான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், 2025ஆம் ஆண்டு இயற்றப்பட்ட “வளர்ந்த பாரதம் - வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதித் திட்டம் (ஊரகம்) சட்டத்தின்” அடிப்படையில், 2026 ஜுலை 1 முதல் நாடு முழுவதும் இத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும், அதன்படி தனிநபர், சமூக மற்றும் தரிசு நிலங்களில் வேளாண் வனவியல் தொகுதி மரநடுகை அனுமதிக்கப்பட்ட பணியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த நடவடிக்கைகள் மூலம் நிலையான நிலப் பயன்பாட்டை ஊக்குவித்தல், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துதல், நாட்டின் பசுமைப் பரப்பை அதிகரித்தல் மற்றும் ஊரக குடும்பங்களுக்கு நீண்டகால வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவது நோக்கமாகக் கொண்டுள்ளதாக இணை அமைச்சர் கம்லேஷ் பஸ்வான் அவர்கள், திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

---

### தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில்

# செயற்கை நுண்ணறிவு (AI) பாடப்பிரிவை செயல்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 23-

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில்செயற்கைநுண்ணறிவு (AI) பாடப்பிரிவை செயல்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ? என மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் வழக்கறிஞர் ஆ.மணி எழுப்பிய கேள்விகள் வருமாறு:-



நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தருமபுரி மாவட்டப் பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), வடிவமைப்புச் சிந்தனை (Design Thinking), சுற்றுச்சூழல் கல்வி (Environmental Education) மற்றும் பிற வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பப் பாடங்களை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? எடுத்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் எத்தனை பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் பிற தொழில்நுட்பம் சார்ந்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன? கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு கல்வியாண்டிலும் இப்பாடங்களில் எத்தனை மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர்?

கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எத்தனை ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் டிஜிட்டல் கற்பித்தல் (Digital Pedagogy), செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தல் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்?

தருமபுரி மாவட்டப் பள்ளிகளில் டிஜிட்டல் உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்களை (AI Labs) அமைக்கவும், ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளதா?

அவ்வாறு திட்டமிட்டிருந்தால், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி, செயல்படுத்தப்படும் காலக்கெடு மற்றும் திட்ட விவரங்கள் என்ன? என்று

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி மத்திய கல்வி இணை அமைச்சர் ஜெயந்த் சௌத்ரியிடம் கேள்வி எழுப்பி உள்ளார்.

---

### திருவள்ளூர் அருகே காக்களூரில்

# 40 ஆண்டுகளாக வாழ்வாதாரம் நடத்தி வந்த வியாபாரிகளை விரட்டும் த.வெ.க. அரசு?

## முன்னறிவிப்பின்றி ஜே.சி.பி.யுடன் வந்த அதிகாரிகள்; “வியாபாரிகளை வஞ்சிக்கும் ஆட்சி” என கண்டனம்!

திருவள்ளூர், ஜுலை 23;

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் காக்களூர் பகுதியில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக மருந்தகம், உணவகம் மற்றும் பல்வேறு சிறு வணிக நிறுவனங்களை நடத்தி வந்த வியாபாரிகள் தங்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தை நம்பி தொழில் செய்து வந்துள்ளனர். மேலும், அந்தக் கடைகள் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் அன்றாட தேவைகளையும் பூர்த்தி செய்து வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழக வெற்றி கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஆளுங்கட்சியைச் சேர்ந்த முக்கிய நபர்களின் தூண்டுதலின் பேரில் அரசு அதிகாரிகள் அப்பகுதிக்குச் சென்று, கடைகளை காலி செய்ய வேண்டும் என்று கூறி, வியாபாரிகளிடம் கட்டாயப்படுத்தி கையெழுத்து பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, எந்த வித முன்னறிவிப்பும், உரிய அவகாசமும் வழங்காமல் ஜேசிபி இயந்திரங்களுடன் அதிகாரிகள் கடைகளை அகற்றும் நடவடிக்கையில் திடீரென ஈடுபட்டதால் காக்களூர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, அங்கிருந்த வியாபாரிகளும் பொதுமக்களும் அதிகாரிகளை முற்றுகையிட்டு, “எந்த அறிவிப்பும் வழங்காமல், பல ஆண்டுகளாக இயங்கி வரும் கடைகளை இடிக்க உத்தரவிட்டது யார்? ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் இந்த அவசரம் ஏன்?” என்று கடும் கேள்விகளை எழுப்பினர். பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து அதிகாரிகள் அங்கிருந்து வெளியேறியதாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டிய அரசு, அவர்களையே அச்சுறுத்தும் வகையில் செயல்படுவதாகவும், பொதுமக்களை வஞ்சிக்கும் அணுகுமுறையையே த.வெ.க. அரசு கடைப்பிடித்து வருவதாகவும் வியாபாரிகள் மற்றும் அப்பகுதி மக்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கத் தவறிய ஆட்சியின் செயல்பாட்டை வெளிப்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன. முன்னறிவிப்பு, மாற்று ஏற்பாடு அல்லது உரிய சட்ட நடைமுறைகள் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



சூலூர் பேரூர் கழகத்தின் சார்பில் பல்லடம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், சூலூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் எஸ்.எஸ்.பொன்முடி அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி மாபெரும் இலவச மருத்துவ முகாமை கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர், ஒன்றிய செயலாளர்கள் மன்னவன் சூலூர் தெற்கு, சிபி.கே.செந்தில்குமார் சூலூர் வடக்கு, மருத்துவர் ராஜேந்திரன், பேரூராட்சி தலைவர்கள் தேவி மன்னவன் சூலூர், செல்வராஜ் பள்ளபாளையம், முன்னாள் பொறுப்புத் தலைவர் செல்வராஜ், பேரூர் கழக செயலாளர்கள் கௌதமன் சூலூர், கபிலன் பள்ளபாளையம், வேலுச்சாமி சாமளாபுரம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் விஜயகுமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் சிவப்பிரகாஷ், சூலூர் பேரூராட்சி துணைத் தலைவர் சோலை கணேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சாப்ரா உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.